செய்தி வெளியீடு எண்: 947. நாள்:26.10.2010.

# மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் அவர்கள் , நகராட்சி நிர்வாகத் துறையில் பணியில் இருக்கும்போது இயற்கை எய்திய 174 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு பணி நியமன பரிந்துரை ஆணைகள் இன்று (26-10-2010) வழங்கினார்கள்

அரசால் அறிவிக்கப்படுகின்ற பல்வேறு மக்கள் நலத் திட்டங்களை விரைந்து செயல்படுத்திடவும், அத்திட்டங்களின் பயன் கடைக்கோடி மக்களுக்கும் சென்றடைந்திடவும் அரசு இயந்திரத்தின் நிர்வாகத் திறனை மேம்படுத்திட தமிழக அரசால் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த வகையில் அரசுப் பணிகளில் தேவையான அளவு புதிய பதவிகளை ஏற்படுத்துவதிலும், ஏற்கெனவே உள்ள பதவிகளிலுள்ள காலிப் பணியிடங்களை நிரப்புவதிலும் அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகின்றது.

நகராட்சி நிர்வாகத் துறையில் இதுவரை நான்கு கட்டங்களாக 628 வாரிசுதாரர்களுக்கு மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களால் கருணை அடிப்படையில் பணி நியமனப் பரிந்துரை ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

இதன் தொடர்ச்சியாக, தமிழ்நாடு நகராட்சிப் பணிகளில் பணியிலிருக்கும் போது இயற்கை எய்திய 174 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு இளநிலை உதவியாளர், வருவாய் உதவியாளர், பணி ஆய்வர், ஓட்டுநர், பதிவறை எழுத்தர், அலுவலக உதவியாளர், மற்றும் காவலர் போன்ற பணியிடங்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமனப் பரிந்துரை ஆணைகள் மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (26-10-2010) வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியின் போது நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, அரசு முதன்மைச் செயலாளர், திரு. அசோக்வர்தன் ஷெட்டி இ.ஆ.ப., நகராட்சி நிர்வாகத்துறை இயக்குநர், முனைவர் ப. செந்தில்குமார், இ.ஆ.ப., மற்றும் நகராட்சி நிர்வாகத் துறை உயர் அலுவலர்கள் உடன் இருந்தனர்.

**வெளியீடு:–**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.**